திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் 10 அல்லது 15 ஆண்டுகள் பணி செய்தாலும், நிரந்தரம் ஆக்கப் படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்ப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது மூலக் கேள்விக்கு மாறான கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

Highways Department and Narayanaswamy Temple in Kanyakumari District.

* 23 Q.—THAVATTIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the Narayanaswamy Temple at Mekkodu village in Kanyakumari District was demolished by the Highways Department; and

(b) if so, the reason therefor?

நெடுஞ்சாலைத் துறையும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாராயணசாமி கோயிலும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குமரி மாவட்டம், மேக்கோடு கிராமத்தில் நாராயணசாமி கோயில் நெடுஞ்சாலைத் துறையினரால் இடிக்கப் பெற்றதா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Secondary Grade Posts in the Ramanathapuram Panchayat Union Elementary Schools

* 24 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) the the total number of Secondary Grade posts the Ramanathapuram Panchayat Union Elementary Schools; and

(b) the number of Selection Grade posts sanctioned therefor?